**தலைப்பு 238 - அரசிறை கொள்கை திணைக்களம் தொடர்பான கணக்காய்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று என்பன அரசிறை கொள்கை திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

**1.3 கணக்காய்வு விடயவெல்லை**

---

தலைப்பு 238 - அரசிறை கொள்கை திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக அரசிறை கொள்கைத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர |
|---|---|---|---|
| நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்திருத்தல் | 1. நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பிலான தகவல்களை செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படாமை<br>2. கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை<br>3. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை | 2.2.1<br>2.2.2<br>2.3 |
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும், பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை | 1. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதில் உள்ள குறைப்பாடுகள்<br>2. மனிதவள முகாமைத்துவத்தின் குறைப்பாடுகள் | 2.5<br>2.6 |

| | | | |
|---|---|---|---|
| | செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செய்திருத்தல் | | |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் கேட்கப்படும் அத்தகைய தகவல், கூற்றுகள், விவர அறிக்கைகள் ஆகியன சரியாகவும் உடனடியாகவும் கொடுக்கப்படுகின்றனவெனவும், | வருடாந்த செயலாற்றுகை உரிய திகதியில் சமர்ப்பிக்காமை | 2.2.3 |

நிதி ஒழுங்குவிதி 128(2) பிரகாரம் அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தரது கணக்கீட்டு நெறிமுறை
நிதி ஒழுங்குவிதி

| | | | |
|---|---|---|---|
| 128(2)(அ) | அரசிறை தலைப்புக்கு ஏற்புடையதாக அரசிறை மதிப்பீடுகளை முற்றாகவும், இயன்றளவு செம்மையாகவும், தயாரிக்கப்படுகின்றன எனவும். | எதிர்பார்க்கப்பட்ட வருமானம் திரட்டுவதற்கு இயலாமை/திரட்டுவதற்கு முடியுமான வருமானம் அதிகரித்தல் அல்லது குறையும்போது வருமான மதிப்பீடுகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை | |
| 128(2)(உ) | நிலுவையாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடனும், அவற்றைச் சேகரிப்பதற்குரிய திணைக்களங்களுடனும் ஆலோசித்து விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன எனவும். | வருமான குறியீட்டுக்கு அமைவாக வருமானம் திரட்டிய நிறுவனங்களில் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கோரப்பட்டிருக்கவில்லை. தகவல்கள் கோரியிருப்பினும், அந்த நிறுவனங்களால் தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2.3 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

-----------------------------------------------------------------------------------------------------

### 2.1 திணைக்களத்தின் பிரதான கடமைப்பொறுப்புகள்

----------------------------------------------

(i) தனியார், அரச மற்றும் சர்வதேச பிரதிநிதிகளின் கூட்டிணைப்புடன், இடைக்கால வரவு செலவு சட்டகத்தினுள் அரச நிதி கொள்கையினை தயாரித்தல்.

(ii) தீர்வை வரி மற்றும் அதற்கு ஏற்புடையதான ஏனைய சட்ட திட்டங்களை

தயாரித்தல் (தீர்வை வரி மற்றும் வர்த்தக பொருட்கள் வரி தவிர்ந்த)

(iii) அரசின் வருமானம், பெறுவனவு உட்பட நிதி செயற்பாட்டு பரம்பல் மற்றும் அரச நிதி செயற்பாடு என்பவற்றின் முகாமைத்துவம் மற்றும் அவதானிப்பு

(iv) எல்லா பதிவுகளும் அடங்கலாக 2003 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

**2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**2.2 செயலாற்றுகை**

**2.2.1 திட்டமிடல்**

ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் அறிமுகப்படுத்திய ‘‘நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ இற்கு இணங்கியொழுகுவதற்காக பாராளுமன்றத்தால் பெயரிடப்பட்டுள்ள 2017 ஆம் அண்டு 19 ஆம் இலக்க இலங்கை நிலையான அபிவிருத்தி சட்டம் மற்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். ஆயினும், நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் சுட்டிகளை அடையாளம் காணப்பட்டு அவற்றை அடைந்துக்கொள்வதற்கு முடியுமான வகையில் ஆண்டின் செயற்றிட்டம் தயாரித்து, நடைமுறைப்படுத்துவதற்காக திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லையென்பதுடன், 2018 ஆம் ஆண்டிலும் கடித ஆவணங்கள் படி அவ்வாறான அடையாளம் காணுதல் மேற்கொள்ளப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

**2.2.2 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச வருமானம் மற்றும் கிடைக்கப்பெறுதல் அடங்கலாக அரச நிதி தரப்படுத்தல், அரச நிதி செயற்பாட்டு முகாமைத்துவம், மற்றும் அவதானிப்பு என்பன திணைக்களத்தின் ஒரு பிரதான கடமைப் பொறுப்பாகும் அந்த பணி நிறைவேற்றுதலின் செயலாற்றுகை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 01/2015 (v) ஆம் இலக்க மற்றும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 30 ஆந் திகதிய திணைக்களத்து சுற்றறிக்கைமூலம் உறுதியாக ஒரு அமைச்சு அல்லது திணைக்களம் என்பவற்றுக்கு விசேடமாக கையளிக்கப்பட முடியாத வருமாம் தொடர்பில், அந்த பொறுப்பை சம்பந்தப்பட்ட வருமானம் திரட்டும் அமைச்சு.:. திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும் மேற்கொண்ட பௌதீக விசாரணையில் அந்த சுற்றறிக்கை பிரகாரம் வருமானம் தொடர்பாக நேரடியான பொறுப்பை அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது வருமானம் திரட்டப்படும் திணைக்களத்து தலைவரால் வகிக்கப்படவில்லையென அவதானிக்கப்பட்டாலும், அது தொடர்பாக நேரடி கண்காணிப்பு அரச நிதி கொள்கை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

(ii) வேறு திணைக்களங்களால் புதிய வருமான குறியீடொன்றை கோரும்போது அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் அல்லது ஆலோசனை வழங்குதல், அரச நிதிக் கொள்கை திணைக்களத்தால் மேற்கொள்ளாத சந்தர்ப்பங்கள் மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டுது.

(iii) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் கிடைத்திருந்த போதிலும், வருமானக் கணக்கில் கணக்கு வைக்கப்படாத வருமானம் ரூபா 3.04 மில்லியனை வங்கி கணக்கில் நிறுத்தி வைத்திருந்த சந்தர்ப்பமொன்று மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டுது

(iv) வருமானம் பதிவு செய்தல் பணம் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் 04 வருமானப் பிரிவுகளில் கிடைக்கப்பெற்ற மொத்தம் ரூபா. 697இ600 ஆன தொகை வருமானக் கணக்கில் கணக்கு வைக்கப்படாது 2018 ஆம் ஆண்டில் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(v) நிதி ஒழுங்குவிதி 570 மற்றும் 571 பிரகாரம் வைப்புச் செய்த திகதி தொடக்கம் 02 ஆண்டு காலப் பகுதிக்குள் உரித்துகள் கோரப்படாத வைப்புகள் காலம்கடந்த வைப்புகளாக கவனத்தில் கொண்டு அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டுமாயினும், ரூபா.3.98 மில்லியன் பெறுமதியில் 04 வைப்புகள் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படாதிருந்தன.

(vi) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக விலங்குணவு சட்டத்தின்கீழ் மேற்கொள்கின்ற அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான கட்டணங்களை மீளாய்வு செய்யப்படவில்லையென மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டதுடன், அந்த கட்டணங்கள் திருத்தம் செய்யப்படாத காலவெல்லை 4 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரை சென்றிருந்தது.

(vii) வருமான கணக்கில் வரவு வைக்காது ரூபா.1.20 மில்லியன் கிடைக்கப் பெற்ற வருமானத்தை, அதற்கு ஏற்புடையதான செலவுகளை மேற்கொள்வதற்கு எதுவித அனுமதியுமின்றி வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தால் வருமானங்களை மதிப்பீடு செய்கையில், முறையான மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு மேற்கொள்ளாமை காரணமாக பின்வரும் குறைப்பாடுகளை அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்விற்கான ஆண்டில் அடிப்படை மதிப்பீடு மற்றும் ஆண்டுக்குள் திரட்டிய உண்மையான வருமானங்கள் என்பவற்றுக்கிடையில் 11 சதவீதம் தொடக்கம் 380 வரையிலான அனுகூலமான ஏற்றுத்தாழ்வுகளும் 11 சதவீதம் தொடக்கம் 100 வரையில் பிரதிகூலமான ஏற்றத்தாழ்வுகளும் அவதானிக்கப்பட்டது.

(ii) கடந்த ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட வருமான மதிப்பீடு மற்றும் ஆண்டுக்குள் திரட்டிய உண்மையான வருமானம் என்பவற்றுக்கிடையில் 01 சதவீதம் தொடக்கம் 100 வரையிலான அனுகூலமான ஏற்றுத்தாழ்வுகளும் நூற்றுக்கு 01 தொடக்கம் 99 வரையில் பிரதிகூலமான ஏற்றத்தாழ்வுகளும் அவதானிக்கப்பட்டது.

(iii) கடந்த ஆண்டில் மற்றும் மீளாய்விற்கான ஆண்டில் ஒழுங்குமுறையாக ரூபா 117.05 மில்லியன் தொகையும், ரூபா 101.91 மில்லியன் தொகையும் என்ற வகையில் வருமானம் சேர்க்கப்பட்டிருப்பினும், அடிப்படை மதிப்பீடு அல்லது திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) 06 வருமான குறியீட்டு இலக்கங்களுக்கு ஏற்புடையதாக அடிப்படை மதிப்பீடுகள் தயாரித்து ஆண்டுக்குள் வருமானம் திரட்டியிருப்பினும், அடிப்படை வருமான மதிப்பீடு மற்றும் உண்மையான வருமானம் என்பவற்றுக்கிடையில் 87 சதவீதத்திலான பிரதிகூலமான ஏற்றத்தாழ்வுகள் அவதானிக்கப்பட்டன ஆயினும் திருத்தம் செய்யப்பட்ட வருமான மதிப்பீடுகளை தயாரிக்கும்போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளவில்லை.

(v) ஆரச நிதி கொள்கை திணைக்களத்தால் அல்லது சம்பந்தப்பட்ட வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒவ்வொரு வருமான குறியீட்டின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய வருமானம் தொடர்பாக, விபரமான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய வழிகாட்டல்கள்.'. ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வருமானத்திலிருந்து மீண்டும் செலுத்தல் மற்றும் தவறுகளை செவ்வையாக்குதலும் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமான 09 சந்தர்ப்பங்கள் நிலவியதாக மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

(vi) மீளாய்விற்கான ஆண்டில் வரவு செலவு மதிப்பீடு அல்லது திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு இல்லாது வருமானம் திரட்டியிருந்த 03 சந்தர்ப்பங்கள் மாதிரி பரிசோதனையில் அவதானிக்கப்பட்டன.

(vii) அடிப்படை வரவு செலவு மதிப்பீடு இருப்பினும், வருமானம் சேர்க்கப்படாத 04 சந்தர்ப்பங்கள் மாதிரி பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

(viii) குத்தகை வருமானத்தின் கீழான வருமான குறியீட்டு இலக்கம் பல வருடங்களாக இருந்து வருவதுடன், ரூபா. 550.12 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட நிலுவை வருமானம் இருப்பினும், அந்த பணத்தொகை அறவிடல் தொடர்பாக வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது அரச நிதி கொள்கை திணைக்களத்தால் அதற்கு ஏற்புடையதான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(இ) மீளாய்விற்கான ஆண்டில் வெட் வரி தீர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 24.14 மில்லியனில் தேறிய ஒதுக்கீடாக ரூபா 23.74 மில்லியன் அல்லது 98 சதவீதம் எஞ்சியிருந்தது. இந்த வெட் வரி தீர்ப்பதற்காக இற்றைப்படுத்தாத கருத்திட்டங்களின் பதிவேடு திணைக்களத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) எல்லா அறிக்கையிடல்களும் அடங்கலாக 2003 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் நடைமுறைப்படுத்தல், திணைக்களத்தின் பிரதான அலுவலாக இருப்பினும் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கடிதக்கோவைபடி, 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 அந் திகதியில் 4000 ம் ஆண்டு அறிக்கை பிரதிகளில் 885 பிரதிகள் அல்லது 22 சதவீதம் எஞ்சியிருந்தது. அதன் செலவு ரூபா. 1இ280இ612 ஆகும்.

(ii) சட்டத்தில் 10 ஆவது பிரிவின்கீழ் ஆண்டு நடுப்பகுதியில் அரச நிதி நிலைமை அறிக்கை யூன் மாதம் இறுதி திகதி அல்லது ஒதுக்கீட்டு சட்டம் நிறைவேற்றப்படும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 09 ஆந் திகதியில் பின்னர் தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதிக்குள் அதாவது யூன் 09 ஆந் திகதி ஆகிய திகதிகளில் பின்னர் தொடங்குகின்ற திகதியில் வெளியிடப்பட வேண்டுமாயினும், உரிய அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை.

### 2.2.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 ஆம் ஆண்டு செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அந்த அறிக்கை 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 05 ஆந் திகதியிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் அளிக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை**

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப் பகுதிக்குள் திணைக்களத்திடம் ஏற்பாடு செய்திருந்த மொத்த தேறிய ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் எஞ்சிய தொகை தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மீதி | மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில் லியன் | ரூபா.மில் லியன் | ரூபா.மில் லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 97.4 | 68.4 | 29.1 | 30 |
| | மூலதனம் | 2.1 | 1.9 | 0.2 | 12 |
| | **மொத்தம்** | **99.5** | **70.3** | **29.3** | **29** |
| 2014 | மீண்டுவரும் | 74.77 | 74.73 | 0.04 | 0.05 |
| | மூலதனம் | 1.12 | 1.0 | 0.12 | 10.37 |
| | **மொத்தம்** | **75.79** | **75.73** | **0.15** | **0.20** |
| 2015 | மீண்டுவரும் | 75.9 | 70.4 | 5.4 | 7 |
| | மூலதனம் | 2.5 | 2.2 | 0.3 | 11 |
| | **மொத்தம்** | **78.4** | **72.6** | **5.7** | |
| 2016 | மீண்டுவரும் | 74.8 | 52 | 22.8 | 30 |
| | மூலதனம் | 2.6 | 1.1 | 1.5 | 56 |
| | **மொத்தம்** | **77.4** | **53.1** | **24.3** | **31** |
| 2017 | மீண்டுவரும் | 3,730.6 | 51.7 | 3,678.9 | 99 |
| | மூலதனம் | 3.6 | 0.4 | 3.2 | 89 |
| | **மொத்தம்** | **3,734.2** | **52.1** | **3,682.1** | **98.60** |

ஒதுக்கீட்டு கணக்கு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்திடம் அளிக்கப்பட்டிருந்த ரூபா 3இ734.19 மில்லியன் தொகையில் தேறிய ஒதுக்கீட்டு செலவினம் ரூபா 52.05 மில்லியனாகியது. அதனடிப்படையில் எஞ்சிய ரூபா 3,682.13 மில்லியன் தொகை மொத்த தேறிய ஒதுக்கீட்டில் 99 சதவீதமாகியது. 2006‥2007 ஆண்டுகளில் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச நடுத்தீர்ப்பின்போது பிரிமா லங்கா (தனியார்) கம்பெனியில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஏற்புடையதாக 2017இ 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் அரசாங்கத்தால் செலுத்துவதற்கு இணங்கிய ஐ.அமெ.டொலர் 55 மில்லியனை செலுத்துவதற்கு திணைக்களத்தின் செலவு விடயத்தின்கீழ் ரூபா 3இ635 மில்லயின் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், அதற்காக இதுவரை கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமை அதற்கு காரணமாக அமைந்திருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் வருடாந்த ஒதுக்கீடு ரூபா 3 மில்லியன் தொகையினை செலவு விடயத்தின் பொருட்டு குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் நி.ஒழு.விதி மாற்றுதல்கள் ஆகிய 02 முறைகளின்கீழ் மொத்தம் ரூபா. 7.36 மில்லியன் அல்லது வருடாந்த ஒதுக்கீட்டில் 245 சதவீதத்திலான ஆன மேலதிக ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த ஒதுக்கீடுகளின் மொத்தம் ரூபா 44.5 மில்லியன் தொகை மீண்டெழும் 02 உப செலவு விடயங்களில் நி.ஒ.விதி 66 – 69 இன்கீழ் மொத்தம் ரூபா 2.63 மில்லியன் அதாவது வருடாந்த ஒதுக்கீட்டில் 03 தொடக்கம் 09 வரையிலான சதவீதத்தில் கழிப்புகளும், ரூபா

1.2 மில்லியன் தொகை வருடாந்த ஒதுக்கீட்டுக்கு, மேலும் செலவு விடயமொன்றின் ஒதுக்கீட்டுக்கு 35 சதவீதத்திலான சேர்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) ஒரு செலவு விடயத்தின் பொருட்டு வரவு செலவு மதிப்பீடுகளின்மூலம் ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்யப்படாவிடினும், ஆண்டுக்குள் நி.ஒ.விதி 66 இன்கீழ் ரூபா 1.35 மில்லியன் ஒதுக்கீடுகளை மாற்றப்பட்டிருந்தது.

(உ) தேறிய ஒதுக்கீடுகளின் மொத்தம் ரூபா 3இ676.91 மில்லியனைக்கொண்ட மீண்டெழும் 11 செலவு விடயங்களினதும், மொத்தம் ரூபா.3.21 மில்லியனைக் கொண்ட 03 மூலதன செலவு விடயங்களினதும் எஞ்சிய தொகை மொத்தம் ரூபா. 3.69 மில்லியன் ஆனதுடன், அது தேறிய ஒதுக்கீட்டில் 13 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

**2.4 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம்**

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டுக்காக ஒரு வருமான குறியீட்டு இலக்கத்திற்கு வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன். ஏனைய குறியீட்டு இலக்கத்திற்கு ரூபா.5இ000 மில்லியன் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கப்படாத குறியீட்டு இலக்கத்திற்கு ரூபா. 3.03 மில்லியன் வருமானம் திரட்டப்பட்டிருந்ததுடன், ஏனைய வருமான குறியீட்டு இலக்கத்திற்காக வருமானம் திரட்டப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறாகும்.

| **வருமான குறியீட்டு இலக்கம்** | **2017 திசெம்பர் 31 ஆந் திகதியில்** | | |
|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உண்மையான வருமானம்** | **மிகை ∴ (பற்றாக்குறை)** |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 10.02.10.00 | இல்லை | 3.03 | 3.03 |
| 20.05.01.00 | 5,000 | ,y;iy | (5,000) |

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள வருமான கணக்குகள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) 10.02.10.00 இலக்கம் கொண்ட வருமான குறியீடு - சமூக பொறுப்பு வரி**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(i) இந்த வருமான குறியீட்டுக்கு ஏற்புடையதாக வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும் திறைசேரி கணினி அச்சீட்டு குறிப்புகளின்படி மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 1.9 மில்லியன் தொகை மற்றும் முன்னரான ஆண்டில் ரூபா 09 மில்லியன் தொகை என்ற வகையில் உண்மையான வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

(ii) கணினி அச்சீட்டு குறிப்புகளின்படி மற்றும் கணக்கின் டி.ஜீ.எஸ்.ஏ வருமானம் 1 படிவம்படி திரட்டிய மொத்த தேறிய வருமானம் ரூபா 1.9 மில்லியன் ஆயினும், டி.ஜீ.எஸ்.ஏ படிவத்தில் பதிவு செய்யப்படும் ஆண்டில் நிலுவை தொகைக்கு நேரொத்ததாக திரட்டிய மொத்த அளவு ரூபா. 1.9 மில்லியனாக காட்டப்படுவதன்மூலம் ரூபா. 59இ721 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதில் ரூபா. 58இ654 ஐ 10.04.01.01 – ஆம் இலக்க வருமான வரி குறியீட்டு இலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்ட தொகையாகும்.

(iii) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சுங்க திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.72.32 மில்லியன் தொகையிலான நிலுவை மீதி தொடர்பான விபரமான உப அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை.

(iv) நிதி ஒழுங்குவிதி 128 (2) (இ) படி அரச வருமானம் சேர்த்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், திணைக்களங்களை உசாவி அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலுவை வருமானங்களை தாமதமின்றி சேர்த்துக்கொள்ளுவதற்கு, விசேட ஏற்பாடுகளை மேற்கொள்வதாக அரச வருமானம் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தல் பொறுப்பு கூறுதல் வேண்டும். ஆயினும், இந்த வருமான குறியீட்டு இலக்கத்திற்கு ஏற்புடையதான நிலுவை வருமானம் அறவிடுவதற்கு காலத்திற்கேற்றவாறானதும் துரிதமானதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

**(ஆ) 20.05.01.00 ஆம் இலக்க வருமான குறியீடு - மத்திய வங்கி இலாபங்கள்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(i) இந்த வருமான குறியீட்டு இலக்கத்தின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா 5,000 ம் மில்லியன் தொகையிலான அடிப்படை மதிப்பீடு அவ்வாறே திருத்தங்களின்றி பேணிச் சென்றிருப்பினும், ஆண்டில் எதுவித வருமானமும் திரட்டுதல் பதிவாகியிருக்கவில்லை. ஆயினும், 2017 ஆம் ஆண்டுக்காக மத்திய வங்கியின் வரிக்கு பின்னரான தேறிய இலாபமான ரூபா 48,356.37 மில்லியன் தொகை பிரித்த பின்னர் ரூபா 14,227.10 மில்லியின் தொகை திரட்டிய நிதியத்திடம் வரவு வைக்கப்பட வேண்டுமாயினும், அதில் எதுவித பணத் தொகையினையும் வருமானமாக இந்த கணக்கில் திரட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் வரிக்கு பின்னரான தேறிய இலாபம் ரூபா 22இ179.52 மில்லியன் ஆவதுடன், அதில் 1949 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் (ஏஜ) ஆவது பிரிவில் 39 ஆவது பிரிவு பிரகாரம் இலாபங்களை பிரித்த பின்னர் இணைந்த நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு தீர்மனரிக்கப்பட்ட ரூபா 6இ378.27 மில்லியன் தொகையில் 5இ000 மில்லியன் ரூபா மட்டும் வரவு வைத்திருப்பதால் ரூபா 1இ378.27 மில்லியனை நிதியத்தில் வரவு வைக்கப்படவில்லை

**2.5 கட்டுநிதி கணக்கு**

மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டின்படி மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதி, மாதாந்தம் கோரிய கட்டுநிதி, மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள கட்டு நிதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதி | கோரிய கட்டுநிதி | கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | திட்டமிடப்பட்டவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதி மற்றும் கோரிய கட்டுநிதிக்கிடையில் வேறுபாடு | கோரிய கட்டுநிதி மற்றும் கிடைக்கப்பெற்றிருந்த கட்டுநிதிக்கிடையில் |
|---|---|---|---|---|---|

| | | | | | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா .மில்லியன் | ரூபா .மில்லியன் | ரூபா .மில்லியன் | ரூபா .மில்லியன் | ரூபா .மில்லியன் |
| சனவரி | 5.0 | 4.3 | 4.7 | -0.7 | 0.4 |
| பெப்ருவரி | 4.8 | 5.5 | 3.5 | 0.7 | -2.0 |
| மார்ச் | 3677.5 | 9.1 | 7.2 | -3668.4 | -1.9 |
| ஏப்ரல் | 4.1 | 8.3 | 7.6 | 4.2 | -0.7 |
| மே | 8.1 | 4.0 | 1.5 | -4.1 | -2.5 |
| யூன் | 4.0 | 3.7 | 3.4 | -0.3 | -0.3 |
| யூலை | 4.0 | 5.5 | 5.1 | 1.5 | -0.4 |
| ஆகஸ்ட் | 3.9 | 4.2 | 3.0 | 0.3 | -1.2 |
| செப்தெம்பர் | 4.0 | 4.9 | 3.6 | 0.9 | -1.3 |
| ஒக்டோபர் | 3.9 | 4.9 | 3.8 | 1.0 | -1.1 |
| நவம்பர் | 4.0 | 4.9 | 3.9 | 0.9 | -1.0 |
| திசெம்பர் | 8.3 | 6.9 | 3.8 | -1.4 | -1.1 |
| மொத்தம் | 3731.6 | 66.2 | 51.1 | -3665.4 | -13.1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 19 திகதி மூலதன செலவுகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 200இ000 ஆன கட்டுநிதி எதுவித நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தாது 2017 திசெம்பர் 29 ஆந் திகதி திறைசேரி செயலாளரிடம் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பான விபரங்கள் உள்ளடங்கும் ஊஜபுயுளு நிகழ்ச்சித்திட்டத்தில், திசெம்பர் மாதத்தின் கட்டுநிதி கணக்கிலும் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) திறைசேரி தொழில்பாட்டு திணைக்களத்தின் வுழு.்.டீநு1.்.2.்.ஐஆீ.்.329.்.2017 ஆம் இலக்க மற்றும் 2017 சனவரி 09 ஆந் திகதியிலான 2017 ஆண்டின் கட்டுநிதி எல்லை தீர்மானித்தல் என்ற தலைப்பில் திணைக்களத்திடம் அனுப்பியிருந்த கடிதம் பிரகாரம், மாதாந்த கட்டுநிதி எல்லை, காலாண்டுக்கொருமுறை மீளாய்வு செய்து உண்மையான தகவல்களை பதிவுசெய்து கட்டநிதி எல்லைகளை தீர்மானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பினும், திணைக்களம் அதன்படி நடவடிக்கை மேற்கொண்டதாக அவதானிக்கப்படவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

### 2.6.1 இணைக்கப்பட்ட பணியாற்தொகுதி, உண்மையான பணியாற்றொகுதி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டான செலவுகள்

மேற்படி 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிடப் பணியாற்தொகுதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகள் செலவு தொகுதியின் பொருட்டு ரூபா. 30.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ஆளுக்குரிய வேதனாதிகள் ரூபா. 601,017 ஆகியது.

| | பணியாற்தொகுதியின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி | உண்மையான பணியாற்தொகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | ------------------ | ---------------- | --------------- | ---------------- |
| (i) | சிரேட்ட மட்டம் | 20 | 14 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 23 | 20 | 03 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 14 | 14 | - |
| | | ------- | ------- | ------- |
| | | 60 | 50 | 10 |
| | மொத்தம் | == | ==== | ==== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேட்ட மட்டத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகப் பதவி மற்றும் பிரதி பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (இ.நி.சே) பதவிகள் 02 பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருப்பதுடன், அதற்கான காணரங்கள் கணக்காய்வில் அறியவரவில்லை. இந்த பதவிகள் தேவையில்லையெனில் பணியாற்தொகுதியின் மீளாய்வினை மேற்கொள்ள வேண்டுமாயினும், இறுதியாக 2016 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பணியாற்தொகுதியின் மீளாய்விலேனும் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் ஆரம்பம் தொடக்கம் நிலவிய சிரேட்ட பொருளியலாளர் மற்றும் புள்ளிவிபரவியலாளர் பதவிகள் 2016 ஆம் அண்டில் பணியாற்தொகுதி மீளாய்வின்போது இல்லாதொழிக்கப்பட்டிருப்பினும், உள்நாட்டு வருமானத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 04 அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) அலுவமேற்படி, பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (இ.நி.சே) 02 பதவிகளின் பொருட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இரண்டு அலுவலர்களை இணைக்கப்பட்டு 2014 ஆம் அண்டு தொடக்கம் அவ்வப்போது கடிதங்கள்மூலம் சேவைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன். அந்த அலுவலர்களை 2018 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஆகு1/1/1/03 இலக்க மற்றும் 2018 மார்ச் 01 ஆந் திகதி தொடக்கம் அந்த அலுவலர்களுக்கு இறுதியாக சேவை நீடிப்பு வழங்குவதற்காக அனுப்பிய கடிதத்திற்கான பதில் கடிதத்தில் மேலும் இவ்வாறு சேவை நீடிப்புகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டாமெனவும், அதற்காக திணைக்களத்தில் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிக்கும்படியும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சரவை அனுமதியின் பேரில் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் திணைக்களத்தின் வரி ஆலோசகர் பதவிக்கு இணைக்கப்பட்ட அலுவலரின் பொருட்டு 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சரவை தீர்மானம்படி தொடர்ச்சியாக சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.